**தலைப்பு 112 – வெளிநாட்டு உறவுகள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்க இருப்பதாகவும்,

(ஆ) இவ்வறிக்கையில் 1.6.2 பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக சென்ற வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடங்கிய ஏனைய பெறுவனவுகள் ரூபா 2,731,432,749 என்பதுடன் பரீட்சை மீதியின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 2,667,247,127 ஆகும். இதன் பிரகாரம் வித்தியாசம் ரூபா 64,185,622 ஆகும். | நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடங்கப்பட்ட ஏனைய பெறுவனவுகள் பரீட்சை மீதியுடன் ஒப்பிடும் போது வித்தியாசப்படல் ஆகாமை. | மீளாய்வாண்டின் போது நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய பெறுவனவுகள் ரூபா 2,731,432,749 என்பதுடன் பரீட்சை மீதியில் ஏனைய பெறுவனவுகள் ரூபா 2,667,447,127 ஆகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், அம்மீதிக்கு திறைசேரியால் உள்ளடக்கப்பட்டதான இறுதியான நாளேட்டுக் குறிப்பு இறுதியில் நாளேட்டுக் குறிப்பின் ரூபா 20,217,163 இற்கான சீராக்கம் மற்றும் 35-18 கட்டுநிதிக்கு நாளேட்டுக் குறிப்பின் மூலம் செய்யப்பட்ட ரூபா 43,730,296 ஆன சீராக்கங்களின் பின்னர் ரூபா 238,163 ஆன வித்தியாசம் காணப்படும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் வருடத்தில் 03 தூதராலயங்களால் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட ரூபா 13,875,228 கிரயமான 3 வாகனங்களின் விற்பனைப் பெறுமதியான ரூபா 2,156,731 ஆனது நீக்கப்பட்ட பெறுமதியாகவும் மேலும், நீக்கப்பட்ட 2 வாகனங்களின் கிரயமான ரூபா 7,648,500 ஆனது உள்ளடக்கப்படாது நிதிசாரா சொத்துக்களின் கூற்றில் நீக்கப்பட்ட பெறுமதி காட்டப்பட்டிருந்தது. நீக்கப்பட்ட 5 வாகனங்களுக்கான ரூபா 19,366,997 ஆன பெறுமதி மீளாய்வாண்டின் போது நிதிாரா சொத்துக்களின் கூற்றில் ஆரம்ப மீதியிலிருந்து குறைக்கப்பட்டிருக்கவில்லை. | நீக்கப்பட்ட 5 வாகனங்களுக்கான ரூபா 19,366,997 ஆன பெறுமதி நீக்கப்பட்ட பெறுமதியாக இனங்காணப்பட வேண்டியமை. | அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் படி நிதிச் சொத்துக்கள் கணக்கிடப்பட்ட முறையின் கீழ் தவறுகள் உரிய முறையில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

கீழ்க்காணும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அரச உத்தியோகத்தரின் முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள் முதலீட்டுச் செயற்பாடுகளில் ஏற்பட்ட நிகர காசுப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருக்க வில்லை. | முதுலீட்டுச் செயற்பாடுகளினால் ஏற்பட்ட நிகர காசுப் பாய்ச்சலில் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளின் மீதிகள் உள்ளடக்கப்பட வேண்டியமை. | அரச உத்தியோகத்தர் முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள் முதலீட்டுச் செயற்பாடுகளினால் உருவான நிகரக் காசுப் பாய்ச்சலில் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதனை எற்றுக் கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் போது அமைச்சின் மாதாந்த கணக்குப் பொழிப்புக்களின் பெறுவனவு மற்றும் வைப்புக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 2,184,223,119 மற்றும் ரூபா 2,107,779,187 என்பதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் வைப்புக்களுக்கான பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளாக முறையே ரூபா 2,332,843,654 மற்றும் ரூபா 2,226,489,422 ஆக காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் வைப்புக்களுக்கான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளாக காசாகச் செய்யப்பட்ட வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட வேண்டியமை. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது திறைசேரி இறுதிக் கணக்கின் பிரகாரம் வைப்புப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு காட்டப்பட்டிருந்தமை. |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் வெளிநாட்டுத் தூதராலயங்கள் தொடர்பாக இழப்பு தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் அதன் கீழான படிவத்தின் படி இழப்புக்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டியமை. | முன்னால் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50(II) இன் பிரகாரம் மதிப்பீடுகளை முடியுமான வரை முழுமையாகவும் | மதிப்பீடுகள் முடிந்த வகையில் முழுமையாகச் சரியான முறையில் | வருடத்தினுள் திறைசேரியினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் படி நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| சரியானதாகவும் தயாரித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். இந் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் 13 செலவு விடயங்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் நூற்றுக்கு 51 இலிருந்து நூற்றுக்கு 100 வீதம் வரையிலான வீச்சில் முழுப் பெறுமதி ரூபா 441,019,627 ஆன ஒதுக்கீடு குறை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக 6 செலவு விடயங்களுக்காக குறை நிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூபா 344,510,000 ஆன ஒதுக்கீடு பெறப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட வேண்டியமை. | எடுக்கப்பட்டிருந்தமையால் செலவுகளை நிர்வகித்தமை, பெருமளவிலான திருத்தச் செலவுகள் இல்லாமை, வருடத்தினுள் அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சருக்கான வெற்றிடம் காணப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் இன்மை, மேலும், 67 தூதராலயங்களில் நிலவுகின்ற சிக்கல்கள், தேவைகளின் பன்முகத்தன்மை மற்றும் தொடர்ச்சியான பரிமாற்ற வீதிங்களின் ஏற்ற இறக்கங்களின் காரணமாக ஏற்படும் விளைவுகளின் அடிப்படையில் செலவுகளைத் துல்லியமான கணக்கிட முடியாமை போன்ற காரணங்களினால் ஒதுக்கங்கள் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது<br><br>சில செலவு விடயங்களுக்குரிய செலவு மதிப்பீட்டு ஒதுக்கமானது திறைசேரியின் ஆரம்ப மதிப்பீட்டில் பெறப்பட்டிராமை, வருடத்திற்குள் அந்நியச் செலாவணி வீதங்களின் ஏற்ற இறக்கங்கள், சர்வதேச அமைப்புக்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்தக் கட்டணம் அதிகரித்தமை, 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பச் சம்பளம் அதிகரித்தமை, தூதராலயங்களில் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டமை மற்றும் அதற்காக உத்தியோகத்தர்கள் இந்நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட விடயங்கள் என்பன் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீட்டை அதிகரித்தமைக்கான காரணங்கள் ஆகும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 30 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய ஒதுக்கீட்டில் உபயோகிக்கப்பட்டதன் பின்னர் சேமிப்புக்களின் மொத்தத் தொகை ரூபா 7,716,246 ஆன ஒதுக்கீடு ரூபா 81,835,422 ஆல் தாண்டப்பட்டு ரூபா 89,551,668 இற்கான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | தேறிய ஒதுக்கீட்டை தாண்டியதால் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படாமை. | இப்பொறுப்புக்களின் அளவுகள் சம்பந்தமாக திறைசேரிக்குத் தெரியப்படுத்தப்பட்டமையுடன் இப்பொறுப்புக்களின் அளவு அமைச்சின் முழுத் தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 0.7 வீதம் மட்டுமே ஆகும். |

## 2.3 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகள்

கீழ்க்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தூதராலயங்களால் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 365,063,523 என்பதுடன் அம்மீதியினுள் வருடம் 2 தொடக்கம் 28 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கான மீதி ரூபா 301,986,504 ஆகும். | பாதுகாப்புப் பிணை வைப்புக்கள் மட்டுமன்றி உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட முற்பணக் காசு தேவை நிறைவடைந்ததும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெளிநாட்டுத் தூதராலயங்களில் கட்டிடங்கள் வாடகை அடிப்படையில் பெறப்படும் போது செலுத்த வேண்டிய பாதுகாப்புப் பிணை வைப்புத் தொகை முற்பணமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகை மீண்டும் அறவிடப்பட வேண்டியது வதிவிடத்திலிருந்து வெளியேறிய பின்னராகும். இம்மீதி முற்பணமாக அறிக்கையிடப் பட்டிருந்தமையுடன் திறைசேரி ஆலோசனையின் படி அறிக்கையிடல் சம்பந்தமான கணக்கீட்டு முறைமைகளைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) அரச உத்தியோகத்தரின் முற்பண ‘‘பீ’’ கணக்கு | | |
| (i) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மரணித்த, வேலையிலிருந்து நீக்கப்பட்ட, சேவையிலிருந்து விலகிய மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,036,618 என்பதுடன் அவற்றில் 5 வருடங்களுக்கு அதிகமான பழைமையான நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,167,642 ஆகும். | நிலுவைக் கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 5 வருடங்களுக்கு அதிகமான கடன் மீதி ரூபா 1,221,992 என்பதுடன் இக்கடன் தொகை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,167,342 வரை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) 5 வருடங்களுக்கு இனங்காணப்படாத மொத்தம் ரூபா 1,515,668 ஆன கடன் மீதி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு தீர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இக்கடன் மீதிகள் காலகாலமாக பேணப்பட்டு வருவதால் இம்மீதியை தீர்க்கப்படுவதற்காகத் திறைசேரிக்கு அறிவுறுத்தப்பட்டமையுடன் முன்னால் இக்கடன் மீதி தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2.4 வைப்பு மீதிகள்

கீழ்க்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 5 வைப்புக் கணக்குகளில் திறைசேரி மீதிகள் மற்றும் அமைச்சின் | திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் மற்றும் அமைச்சின் புத்தகங்களின்பிரகாரம் | முன்னால் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்களின் பிரகாரம் மீதிகளுக்கிடையில் ரூபா 4,521,095 ஆன குறைபாடு காணப்பட்டது. | மீதிகளுக்கிடையே வேறுபாடு காணப்படாமை. | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 565(5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்குமாகத் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புப் பொழிப்புக்கள் கூற்று அடுத்த மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமாயினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | முன்னால் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 2 வருடத்திற்கு மேற்பட்ட வைப்புக்கள் ரூபா 8,851,391 மற்றும் தூதராலயங்களின் 2 வருடத்திற்கு மேற்பட்ட சட்டரீதியான கொடுப்பனவிற்காகத் தற்காலிகத்தக்க வைத்தல் ரூபா 28,498,689 ஆகும். | 2 வருடத்திற்கு மேற்பட்ட வைப்பு மீதிகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | தூதராலயங்கள் 67 இற்கான தகவல்கள் ஒன்றாகச் சேகரிக்கப்பட்டு அமைச்சிற்கான பொது வைப்புக் கணக்கில் இடுவதற்கு மாதாந்தம் செயற்படுத்துவதற்கான இயலாமை உள்ளது. அதனால் அரை வருட இணக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படி 2020 யூன் 30 ஆந் திகதிக்கு இணக்கப்பட்டு 2 வருடத்திற்கு மேலான மீதிகள் சம்பந்தமாக முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

#### 3.1.1 தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரான்சின் பாரிஸ் மற்றும் ரஷ்யாவின் உயர்ஸ்தானிகர் காரியாலயங்களுக்கான 2019 வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் உள்ளடக்க வேண்டிய அடிப்படை அம்சங்களை நிதி ஒதுக்கீடு, மாதாந்த அல்லது காலாண்டிற்கான எதிர்பார்க்கப்படும் இலக்குகள், இவ்விலக்குகளை அடைவது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் தகவல்கள் இவற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அத்துடன் உத்தியோகத்தர்களின் செயலாற்றலை அளவிடுவதற்கான ஒரு அளவுகோலாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது அதில் அடங்க வேண்டிய விடயங்கள் உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டியமை. | முன்னால் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

கீழ்க்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ரஷ்யாவின் மொஸ்கோ உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் இருப்புப் பதிவேடு ஒன்று இன்மையால் வருடத்தினுள் கொள்வனவு செய்யப்பட்ட மூலதன | மூலதன இருப்புக்கள் கொள்வனவு செய்யும் போது இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | குறிப்பிட்ட முறைமையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | கையிருப்புக்கள் இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை வருட இறுதியில் போதான கையிருப்புக் கணிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆகும். | | |
| (ஆ) | பழைமை வாய்ந்த கட்டிடத்தின் ஒரு பகுதியில் பிரான்ஸில் பாரிஸ் உயர் தானிகர் காரியாலயம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இக்காரணத்தினால் கொன்சியூலர் நடவடிக்கைகளுக்காக வருகின்ற இலங்கையர்களுக்கான வசதிகளை வழங்க முடியுமான இடமாக மேலும் உயர்நல சேவைகளை வழங்கும் பொருட்டுப் போதியளவு இடவசதியுள்ள இடமொன்றைப் பெற்றுக்கொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பது அவதானிக்கப்பட்டது. | உயர்ஸ்தானிகர் காரியாலயங்கள் அமைந்துள்ள இடங்கள் சம்பந்தமாக தற்போது வருடாந்த வாடகை செலவுகள் ரூபா 60 மில்லியன் (யூரோ 286,189) கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இதனால் வசதியான கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்குரிய இயலுமை சம்பந்தமாக விசாரிக்கப்பட வேண்டியமை. | பொருத்தமான கட்டிடமொன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஒன்று நியமிக்கப்படும். |
| (இ) | ரஷ்யாவின் மொஸ்கோ உயர்ஸ்தானிகர் காரியாலயம் மற்றும் உயர்ஸ்தானிகர் உத்தியோகபூர்வ விடுதி அமைந்துள்ளமை ரஷ்யா அரசிற்குரியதான பழைமை வாய்ந்த கட்டிடத்திலாகும். இக் கட்டிடம் பாரியளவிலான திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென ரஷ்யா அரசினால் இனங்காணப்பட்டிருந்த துடன் அதன் பிரகாரம் | கட்டிடமொன்றைப் பெறுவதற்கான இயலுமை சம்பந்தமாக விசாரிக்கப்பட வேண்டியமை. | கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக அமைச்சினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | இக்கட்டிடத்திலிருந்து வெளியேறி குறிப்பிட்ட திருத்த வேலைகள் நடைபெறுவதால் அரசினால் வழங்கப்பட்ட தற்காலிகக் கட்டிடத்திற்குச் செல்வதாக அரசு சார்பாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டது. எனினும், உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் தேவைப்பாடு சம்பந்தமான ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சிற்கு வெளிக்காட்டப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு உயர்ஸ்தானிகர் காரியாலயங்களில் உயர்ஸ்தானிகர் காரியாலயம் மற்றும் ஏனைய பதவியணியினரின் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களுக்காக வருடாந்த வாடகையாக ரூபா 1,720 மில்லியன் அமைச்சினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதற்கு ஒரு தீர்வாக நிதி ரீதியாக சாதகமான வழியில் தூதராலயங்களுக்காக கட்டிடங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை | தூதராலயச் சுற்றுப்புறம், தூதராலயத் தலைவரின் உத்தியோகபூர்வ விடுதி மற்றும் ஏனைய பதவியணியினரின் விடுதிகள் என்பவற்றுக்காக வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவுகளை குறைப்பதற்காக காணி அல்லது கட்டிடம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | வருடாந்தம் கூடியளவு வீட்டு வாடகைத் தொகை செலவிடப்படுகின்ற தூதராலயத் தலைவரின் உத்தியோகபூர்வ விடுதி மற்றும் காரியாலயக் கட்டிடத்தை கொள்வனவு செய்தல் முதலாவது நடவடிக்கையின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. |

## 3.3 அரச உத்தியோகத்தரின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரான்சின் பாரிஸ் உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் நி.பி. 880 இன் பிரகாரம் பணக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் உத்தியோகத்தர் சம்பந்தமான பிணை பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிணை வைக்கப்பட வேண்டியமை. | அமைச்சினால் விசாரிக்கப்பட்டுத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 நட்டங்களும் இழப்புக்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வெளிநாட்டுத் தூதராலயங்கள் சம்பந்தப்பட்ட நட்டங்களும் விடுபடுத்தல்களின் 48 சந்தர்ப்பங்களிலான பெறுமதி ரூபா 27,394,194 ஆகும். இம்மீதிகள் 10 வருடங்களுக்கு மேற்பட்டதும் மற்றும் வருடங்கள் 5 இற்கும் வருடங்கள் 10 இற்கும் இடையிலான மீதிகள் முறையே ரூபா 1,334,669 மற்றும் ரூபா 21,626,285 உம் ஆகும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான சோதனைகளைச் செய்து தீர்க்கப்படுவதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தூதராலயங்களுடாக இச் சம்பவங்களுக்கான தகவல்களைப் பெற்று நி.பி 106 மற்றும் நி.பி 113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். காலப் பகுப்பாய்வின் பிரகாரம் முன்னுரிமை அடிப்படையில் விரைவில் முடிப்பதற்காக குறிப்பிட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தல் வழங்குவதாக குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பணம் தவறாகப் பயன்படுத்தப்பட்ட திருட்டுக்கள் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிட வேண்டிய | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தேவையான பரிசோதனைகளைச் செய்து தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உரோம உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் பணத் திருட்டுக்களுக்கு உரிய உத்தியோகத்தர்களின் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமாக தற்போது கொழும்பு நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 17,200,287 சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான பரிசோதனைகளை நடாத்தி தீர்க்கப்படுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாது 11 வருடங்களாக முன்கொண்டு செல்லப்பட்டுள்ளது. | | ஏற்கப்பட்டிருப்பதுடன் இற்றை வரையில் சோதனை நடாத்தி மிகுதி பணத் திருட்டுக்கள் சம்பந்தமாக மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளின் அறவிடப்பட வேண்டிய தொகை சம்பந்தமாகவும் முன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | விடுதி பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா 2,166,472, வாகன விபத்து ரூபா 3,752,431 அறவிடப்பட முடியாமலும் முற்பணம் ரூபா 1,750,081 கைத்தொலைபேசி இழப்பீடு ரூபா 16,000 மற்றும் வாகனத் திருட்டு, கணனி, ஏனைய இழப்புக்கள் சம்பந்தமாக ரூபா 2,277,614 ஆன தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்காது நிதிக் கூற்றுக்களில் நட்டம் மற்றும் விடுதலின் கீழ் தொடர்ந்தும் காட்டப்பட்டு வருகின்றது. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந் நட்ட இழப்புக்கள் சம்பந்தமாக மேலும் கண்டறிந்து சரி செய்வதற்காகத் குறித்துக் கொள்ளப்பட்டது. |

## 3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

கீழ்க்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2015 இன் யூலை 23 ஆந் திகதிய 7/2015 ஆம் இலக்க ஓய்வூதியத் சுற்றறிக்கையின் 11,12 ஆம் பிரிவுகள் மற்றும் 1942 இன் 18 ஆம் இலக்க பொது சேவை சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் அனைத்துப் பங்களிப்புக்கான பங்களிப்பாளரின் கணக்குகளில் காணப்படும் கட்டாய பங்களிப்புத் தொகைக்கு மற்றும் அரசின்உபகாரத் தொகைக்குக் கூட்டு மற்றும் அரசின்உபகாரத் தொகைக்கு கூட்டு வட்டி உரித்தானது இப்பிரமாணங்களுக்கு புறம்பாக ரொரண்டோ கொன்சியூலர் நாயகம் அலுவலகத்தின் தொலைத்தொடர்பு உதவி உத்தியோகத்தரின் 2008 ஆகஸ்ட் இலிருந்து 2018 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்காக பொதுச் சேவை சேமலாப நிதியத்தின் அரச உபகாரத் தொகை ரூபா 2,861,331 ஆன தொகை உத்தியோகத்தர்களின் 2014 யூன் தொடக்கம் | பொதுச் சேவை சேமலாம நிதியத்தின் (PSPF) கட்டாயப் பங்களிப்புத் தொகை (8%) மற்றும் அரச உபகாரத் தொகை (12%) இற்கான பங்களிப்புத் தொகை மாதாந்தம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியமை. | பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத்தொகை உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் கழித்தலானது தூதராலயங்களினால் அறவிடுவதற்கு தாமதமாவது அவதானிக்கப்பட்டமையுடன் விடயப்பரப்பு அமைச்சினால் தூதராலயங்கள் அறிவுறுத்தப்படுவதுடன் அவற்றை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இது சம்பந்தமாக மேலும் கவனத்திற் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கான தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | 2018 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கான பொதுச் சேவை சேமலாப நிதியத்தின் அரச உபகாரத் தொகையான ரூபா 1,411,660 ஆன தொகை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டமை 2019 மார்ச் மாதத்திலேயே ஆகும். இக்காரணத்தினால் உரித்தான கூட்டுவட்டி இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படும் போது உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் தலைவரால் செய்யப்பட வேண்டிய போதிலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மொஸ்கோ உயர்ஸ்தானிகர் காரியாலத்தில் கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படலானது உயர்ஸ்தானிகர் காரியாலத்தின் முதலாவது செயலாளர் அல்லது ஆலோசகரினாலேயே (Counsellor) ஆகும். | 2019 சனவரி 04 ஆந் திகதிய அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படுதல், அத்தியாட்சிப்படுத்தல் மற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | பரிந்துரைகளை செயற்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (இ) | 1986 இலிருந்து 2018 செப்டம்பர் வரையான காலப்பகுதியினுள் மீளமைக்கப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகளை உள்ளடக்கியதாக இலங்கை அரசு ரஷ்யக் குடியரசுடன் 20 இருதரப்பு | ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை சம்பந்தமாக பின் தொடர்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உடன்படிக்கையிலுள்ள விடயங்களை கண்டுபிடிப்பதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரில் குறிப்பிட்ட ரஷ்யாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனத்துடன் உடன்படிக்கை சம்பந்தமாக தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கைகளுக்கு உடன்பட்டிருந்தது. எனினும், அவ் உடன்படிக்கை மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் குறிப்பிட்ட அரசு நிறுவனத்துடன் தொடர்பு படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுப் பின் தொடர்வதற்கு தூதராலயம் நடவடிக்கை எடுக்கவில்லை. | | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியின் போது அமைச்சின் பணிக் குழாமின் வெற்றிடங்கள் மற்றும் மேலதிக எண்ணிக்கை முறையே 69 மற்றும் 11 ஆக இருந்ததுடன் தூதராலய பணிக் குழாமின் வெற்றிடங்கள் 127 ஆக அவதானிக்கப்பட்டது. | அமைச்சின் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஆட்சேர்க்கும் சந்தர்ப்பங்களில் வெற்றிட எண்ணிக்கைக்குரிய அளவில் விண்ணப்பதாரிகள் நியமிக்கப்படாமை, புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக பிரிவுத் தலைவர்களை நியமித்தல் போன்ற காரணங்கள் வெற்றிடங்கள் மற்றும் மேலதிக எண்ணிக்கைகள் ஏற்படுத்துவதற்குரிய சில செலவு விடயங்களுக்குரிய செலவு மதிப்பீட்டு ஒதுக்கமானது திறைசேரியின் ஆரம்ப மதிப்பீட்டில் பெறப்பட்டிராமை வருடத்திற்குள் அந்நியச் செலாவணி வீதங்களின் ஏற்ற இறக்கங்கள், சர்வதேச அமைப்புக்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்தக்கட்டணம் அதிகரித்தமை, 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பச் சம்பளம் அதிகரித்தமை, தூதராலயங்களில் நியமனம் செய்யப்பட்டமை மற்றும் அதற்காக உத்தியோகத்தர்கள் இந்நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட விடயங்கள் என்பன குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீட்டை அதிகரித்தமைக்கான காரணங்கள் ஆகும். |